OFFICE OF THE REGISTRAR OF BOOKS
8 - JAN 1940
MADRAS

Tinnevelly Diocese
1st. Lay Conference, Nazareth.

H54

OPENING ADDRESS.

திருநெல்வேலி அத்தியக்ஷாதீன
1-வது சபையார் மகாநாடு,

1938-ம் ௵ மே ௴ 19, 20.

நாசரேத்.

திறப்பாளர் பிரசங்கத்தின் சுருக்கம்.

1-வது சபையார் மகாநாடு.

நாசரேத்—மே, 1938.



திருநெல்வேலி அத்தியக்ஷாதீனம்

(மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி)

1-வது சபையார் மகாநாடு.

1938-ம் ஞு மே மீ, 19, 20.

நாசரேத்.

470
252

காரியதரிசியின் அறிக்கை.

மகாநாட்டின் நோக்கம்:

நம் அத்தியக்ஷாதீனத்திலுள்ள இந்திய சபையை ஊன்றக் கட்டி, சுவிசேஷ ஊழியத்தில் அதிகமதிகமாய் சபையாரை ஈடு படச்செய்வதும், சமுதாய, பொருளாதார, தேசிய விஷயங்களை ஆராய்ச்சிசெய்து, சீர்திருத்தங்கள் செய்வதில் சபையாரை முன்னணியத்திற்கு கொண்டுவருவதுமே.

முதல் மகாநாட்டின் காலமும் இடமும்:

1938-ம் ஞு மே மீ 20-ம் உ நாசரேத்தில் முதல் மகாநாடு கூடிற்று.

மகாநாட்டை திறந்து வைத்தவரும், அக்கிராசனரும்:

மதுரை முனிசிபல் கமிஷனரும், இந்திய சபை விஷயமாய் பல ஆராய்ச்சிகள் செய்துவருபவருமாகிய ஸ்ரீமான் R. D. பால், M. A. மகாநாட்டைத் திறந்துவைத்து, மிகவும் உன்னத கருத்துக் களடங்கிய ஓர் பிரசங்கம் செய்தனர். போன நூற்றாண்டின் கிறிஸ்தவர்களைவிட இந்த நூற்றாண்டின் மக்கள் மேல்நாட்டுப் பைத்தியமாகவே நிற்கின்றாரேயன்றி, கிறிஸ்து மார்க்கத்தை, தம் சொந்தமாக்கி, இந்திய தேசத்திற்குத் தக்கவாறு அதை அமைக்க இன்னும் சிந்தை செய்யவில்லை. ஆகையால் சபையார் யாவரும் ஒன்றுகூடி, சபையின் வளர்ச்சிக்குறிய விஷயங்களையும், சுவிசேஷத்தை இந்தியாவிற்கு எவ்விதம் புகட்டலாமென்பதையும் ஆலோசிக்க வேண்டுமென, வெகு தெளிவாகவும் ஆழமாகவும் எடுத்துரைத்தனர்.

ஸ்ரீமான் P. A. தங்கசாமி, B.A., M.L. அவர்கள் அக்கிராசனம் வகித்து வெகு திறமையுடன் தர்க்கங்களுக்கும், வாசிக்கப்பட்ட கட்டுரைகளுக்கும் முடிவுகட்டி கூட்டத்தை காலவட்டவணைப்படி நடத்தினர்.

முன்னுரை தியானம்:

சபையார் தேவ ஊழியத்தில் பங்கெடுக்கவேண்டுமாகில், அவர்களைப் பரிசுத்தப்படுத்துவது நிரம்ப அவசியமே. ஆயத்த மின்றி ஊழியமில்லை. இதனை நன்குணர்ந்து மகாநாட்டின் முந் தின இரவு விசேஷித்த ஆயத்த தியானம் ஏற்படுத்தப்பட் டிருந்தது.

திருநெல்வேலி ஜில்லா கல்வி உத்தியோகஸ்தராயிருந்த ஸ்ரீமான் D. சாமுவேல், M. A. அவர்கள் இஸ்ரவேலரை வழிநடத்த தேவன் தெரிந்துகொண்ட மோசே முனிவரின் சரித்திரத்தில், அவர் ஊழியத்திற்கு அழைக்கப்பட்ட முட்செடியின் காட்சியை எடுத்துரைத்து, "நீ நிற்கும் ஸ்தலம் பரிசுத்தமானது, உன் பாத ரட்சைகளைக் கழற்றி எறிந்துபோடு" என்னும் கருத்தின்மேல், மகாநாட்டின் பிரதிநிதிகளை ஆயத்தப்படுத்துமாறு, பிரசங்கித் தனர். மகாநாட்டிற்கு உன் பாதரட்சைகளாகிய சுயசித்தம் பெருமை, அசுத்தம், முதலியவைகளைக் கொண்டுவாராமல், தாழ் மையை அணிந்து, தேவ சித்தத்தை அறிந்து, அன்புடன் மகா நாட்டில் எல்லாவற்றையும் பேசவும், தர்க்கிக்கவும் வேண்டு மென்றனர்.

மகாநாட்டுத்தினத்தின் காலை.

காலை 7-30 மணிக்கு பரி. நற்கருணை பரிமாறப்பட்டது. 9 மணிக்கு நாசரேத்து ஆண்கள் உயர்தரப் பாடசாலையில் அமைக் கப்பட்டிருந்த மகாநாட்டின் பந்தலில் மகாநாடு கூடிற்று. "கர்த் தாவே, யுகாயுகமாய் நீர் எங்கள் அடைக்கலம்" என்ற கீதத்தை பிரதிநிதிகள் யாவரும் ஏகோபித்துப் பாடியபின், ராவ் சாகிப் M. கோவில்பிள்ளை, M. A. அவர்கள் ஜெபம் செய்தனர்.

மகாநாட்டின் வரவேற்புக் கமிற்றியின் அக்கிராசனரான ஸ்ரீமான் சாமு விக்ற்றர், மகாநாட்டின் அழைப்புக்கிணங்கி விசேஷித்து விஜயஞ்செய்திருந்த ஸ்ரீமான் R. D. பால் அவர்களையும், அக்கிராசனர் P. A. தங்கசாமி அவர்களையும், மற்றும் பிரதிநிதிகள், சிநேகிதர்களையும், வரவேற்று அவர்களுக்கு நல்வாழ்வு கூறினர்.

பின்னர் ஸ்ரீமான் R. D. Paul மகாநாட்டைத் திறந்து வைத்து, வெகு சாதுர்யமாய் பிரசங்கித்தனர். அதன் விசேஷித்த கட்டுரைகள் படிக்கப்பட்டன.

கட்டுரைகள்.

காலை:

ஸ்ரீமான் D. சாமுவேல், M. A. அவர்கள் "நம் சமுதாய சீர்திருத்தம்" என்ற பொருள் பேரிலும் ஸ்ரீமான் J.S.பொன்னையா, MA. அமெரிக்கன் காலேஜ் சரித்திர ஆசிரியர், "கிறிஸ்தவர்களும் பொருளாதார நிலையும்" என்றதின்பேரிலும் அரிய ஆழ்ந்த கருத்துகள் அடங்கிய கட்டுரைகள் வாசித்தனர்.

மாலை:

பகற்போஜனத்திற்குப்பின் 2-30 மணிக்கு ஸ்ரீமான் G. J. தேவதாஸ், M. A. "கிறிஸ்தவர்களும் தேசீயமும்" என்ற பொருளிலும், ஸ்ரீமதி Mrs. Doss Krishnaiah "நம் இந்திய கிறிஸ்தவ பெண்கள்" என்ற பொருள்பற்றியும் வீரமும், சுவையும் பொருந்திய கட்டுரைகள் படித்தனர். ராவ் சாகிப் M. கோவில்பிள்ளை, M. A. அவர்கள் "நமது சுவிசேஷ ஊழியம்" என்ற கட்டுரை, விசேஷித்த ஆராய்ச்சி பொருந்தியதாய் இருந்தது.

தேநீர்பானத்திற்குப்பின் 5-30 மணிக்கு ஸ்ரீமான் S. சாலமோன் அவர்களால் "சபையும் அத்தியக்ஷாதீன சட்டதிட்டங்களும்" என்றதின்பேரில் வாசிக்கப்பட்ட கட்டுரை விசேஷித்த ஆராய்ச்சியையும், தைரிய யோசனையையும் காட்டிற்று. ஸ்ரீமான் ஜி. சாமு விக்ற்றர் அவர்கள் "நமது மிஷனெரிமாரும் இந்திய சபையும" என்ற பொருளின்பேரில் பேசினர். நமது இந்திய சபை தாய்மார் தங்கள் கண்மணிகளில் சிறந்த மக்களை நம் சபைக்காக மிஷனெரிகளாக தத்தம் செய்யவேண்டுமென எடுத்துக்காட்

டப்பட்டது. கட்டுரைகள் வாசிக்கப்பட்டபின் விஷயங்கள் தர்க்கிக்கப்பட்டன. அநேக பிரதிநிதிகள் வெகு ஊக்கமும், நுண்ணறிவும் காட்டினர். தர்க்கத்தில் விசேஷமாக ஸ்ரீமதி வேதமாணிக்கம் ஐயரவர்கள் அம்மாள் நமது வாலிபர் தங்களை ஒறுத்து 5 அல்லது 10 வருஷங்களுக்கோ நமது பாடசாலைகளிலும், சபைகளிலும், மிஷனெரி ஊழியம் செய்ய முன்வரவேண்டும். அதற்கென்று தாய்மார் தங்கள் பிள்ளைகளைப் பயிற்சிக்கவேண்டும் என்றது வியக்கத்தக்கது.

தீர்மானங்கள்.

1. தாய்ச்சங்கத்தார் மிஷனெரிமார் அனுப்பியதற்காக அவர்களுக்கு வந்தனம் சொல்லி ஓர் தீர்மானம் போடப்பட்டது.

2. ஆங்காங்கே சபைகளில் சபையார் சங்கம் (Lay Association) ஏற்படுத்தலாமென ஓர் தீர்மானம் நிறைவேறியது.

வந்தவர்களின் தொகை.

பிரதிநிதிகள் 250—14 சர்க்கிள்களிலிருந்து.

வருமானம் ரூ. **260—8—0.**

செலவு ரூ. **285—4—0.**

மகாநாடு செய்ததென்ன?

சபையார்கள் வருஷமொருமுறை ஒன்றுகூடி, தங்களைப் பரிசுத்தப்படுத்தி, இந்திய சபைக்குரிய விஷயங்களை ஆலோசித்தல் நலமென்று முதல் மகாநாடு காட்டிற்று. வந்திருந்த எல்லா பிரதிநிதிகளும், வரத்தடைப்பட்ட அநேக சிநேகிதர்களும் மகாநாட்டை தொடர்ந்து நடத்தவேண்டுமெனகூற மகாநாடு இடம் கொடுத்தது. ஆகவே மகாநாடு சபையாரின் எண்ணத்தை திறந்து காட்டியிருக்கிறது.

சபையாரில் ஓர் புது ஊக்கத்தையும் சபைக்கடுத்த காரியங்களை ஆலோசிக்க வேண்டுமென்ற எண்ணத்தையும் உண்டாக்கியிருக்கிறது.

மகாநாடு என்ன செய்துவிட்டது?

மகாநாட்டில் ஸ்ரீதனம் அல்லது ரொக்கம் வாங்குவது கிறிஸ்தவ சமுதாயத்தைக் கெடுக்கிறது என்று பேசினீர்களே—அக்கேட்டை நீக்கிவிட்டீர்களா? அத்தியக்ஷாதீன சட்டங்களில் சில தீமைகள் இருக்கின்றன என்று தர்க்கித்தீர்களே—அவைகள் நீக்கப்பட்டுவிட்டதா? என்ற கேள்விகளைக் கேட்க நேயர்களில் சிலர் துடுதுடுப்பாய் நிற்கலாம்.

காரியதரிசியாகிய நான் என்ன விடை சொல்லப்போகிறேன்?

உங்களில் யாராவது தன் நிலத்தை பண்படுத்தி விதைபோட்டு ஒரேநாளில் கனி உண்டாக்கியிருந்தால் அந்த அபூர்வமான சக்தியை உங்கள் மகாநாட்டிலும் எதிர்பாருங்கள்.

நாம் போனவருஷம் மண்வெட்டியை எடுத்து சிறிது நிலத்தை சிறிது கோத்தியிருக்கிறோம். சபையார்களை அவர்கள் தூக்கத்திலிருந்து சற்று அதட்டியிருக்கிறோம். இன்னும் எல்லோரையும் மகாநாட்டின் மூலமாய் கூட்டிச் சேர்த்து, அவர்களுக்குள் விதைவை நாட்டி, வருங்காலத்தில் கனி கொடுக்கச்செய்து, இந்திய சபையை நிலைநாட்டுவது நம் கடமையாகும்.

ஜி. சாமு விக்டர்,
4—9—1939. பொதுக்காரியதரிசி.

விலாசம்:—

தலைமை ஆசிரியர்,
சி. எம். எஸ். உயர்தர பாடசாலை,
சிரிவில்லிபுத்தூர்.

1-வது மகா நாடு.—நாசரேத்.

திறப்பாளர் பிரசங்கத்தின் சுருக்கம்.

ஸ்ரீமான் ராஜய்யா, டி. பால், எம். ஏ., மதுரை.

கிறிஸ்தவர்கள் கூட்டம்.

இம்மகாநாடு திருநெல்வேலி அத்தியக்ஷாதீனக் கிறிஸ்தவ சபையாரின் மகாநாடு. இம்மகாநாட்டின் பெயரையிட்டு ஒரு நிமிஷம் ஆலோசித்து, திருநெல்வேலி அத்தியக்ஷாதீனக் கிறிஸ்தவ சபையோர் என்ற நாமதேயம் எவ்வெவற்றைக் குறிப்பிடுகிறது என்பதைச் சிந்திப்பது பிரயோஜனமாயிருக்கும்.

முதலாவது:— நாம் கிறிஸ்தவர்களாகக்கூடி வந்திருக்கிறோம். அதாவது மதமொன்றையே மனதிற்கொண்ட ஒரு கூட்டமாயிருக்கிறோம். ஏனெனில் ஒரு கிறிஸ்தவனுக்குத் தன் மதமே ஜீவியத்தின் முக்கிய விஷயம். தன் சொந்த ஜீவியத்திலும், தான் வசிக்கும் ஜன சமூகத்தின் ஜீவியத்திலும், தான் சம்பந்தப்பட்ட தேசீய ஜீவியத்திலும் சிரேஷ்டமாய் விளங்கவேண்டுவது இதுவே. ஒரு கிறிஸ்தவனுக்குத் தன் உள்ளான பக்தியின் ஜீவியமும், கடவுளுக்கும் தனக்குமுள்ள ஐக்கியமும், பிறருக்கும் தனக்குமுள்ள அந்நியோந்நியமுமே பிரதான கரிசனையாயிருக்கவேண்டும். தேவனுடைய ராஜ்யத்தையும் அதின் நீதியையும் முதலாவதாகவும், முக்கியமானதாகவும் தேடுபவனே சரியான கிறிஸ்தவன் என அழைக்கப்படலாம். உலகிலுள்ள மற்றெதுவும் இதற்கு இணையாகமாட்டாது. உலக விஷயங்கள் கடவுளின் ராஜ்யத்திற்குச் சம்பந்தப்பட்டு, உபயோகப்பட்டால்மாத்திரமே உத்தம கிறிஸ்தவன் அவற்றில் கரிசனை கொள்வான். ஆகவே இங்கு கூடியிருக்கும் நாமும் அதே நோக்கத்துடன்தான் சகலத்தையும் கலந்து பேசிக்கொள்ளவேண்டுமே தவிர, உலக வாழ்க்கைக்கானதொன்றும் இதில் சம்பந்தப்பட நிமித்தமில்லை. இம்மகாநாடு கூட்டப்பட்டிருக்கும் முக்கிய நோக்கம் தேவனைப்பற்றியும் அவருடைய ராஜ்யத்தைப்பற்றியும் கலந்து ஆலோசிக்கத்தான். நமது முக்கிய வாஞ்சையும் நாட்டமும் அதுவே. இது விஷயமான நமது கடமைகளை நாம் எப்படிக்

1-வது மகாநாட்டில் பங்கெடுத்த ஊழியர்கள்.



இடம் இருந்து வலம்—உட்கார்ந்திருப்பவர்கள்:—

ஸ்ரீமான் ஜி. தேவதாசன், எம். ஏ.; ஸ்ரீமான் எம். எஸ். அப்பாதுரை, (வரவேற்புக் கமிற்றி மெம்பர்); ஸ்ரீமான் டி. சாமுவேல், எம். ஏ., (தியானக் கூட்டம் நடத்தியவர்); ஸ்ரீமான் ராஜையா. டி. பால், எம். ஏ., (மகாநாட்டை திறந்து வைத்தவர்); ஸ்ரீமான் பி. ஏ. தங்கசாமி, பி. ஏ., எம். எல்), (அக்கிராசனர்); ஸ்ரீமான் ராவ் சாகிப். எம். கோவில்பிள்ளை, எம். ஏ., (வரவேற்புக் கமிற்றி மெம்பர்); ஸ்ரீமான் ஜெ. எஸ். பொன்னையா, எம். ஏ.; ஸ்ரீமான் ஏ. பிச்சமுத்து, (வரவேற்புக் கமிற்றி மெம்பர்)

இடம் இருந்து வலம்—நிற்பவர்கள்:—

டாக்டர். எஸ். சாமுவேல், (வ. க. மெம்பர்); ஸ்ரீமான் ஜி. சாமு. விக்ற்றர், (வ. க. தலைவர்); ஸ்ரீமான் ஆசீர். கோவில்பிள்ளை, (வ. க. மெம்பர் & பொக்கிஷதார்); ஸ்ரீமான் எஸ். சாலமோன், (வ. க. மெம்பர்); ராவ் சாகிப். எஸ். எம். சாலமோன், (வ. க. மெம்பர்).

குறைவின்றிச் செய்து முடிக்கலாமென்றுலோசிக்கவே இங்கு கூடியிருக்கிறோம். இடைக்கிடையே நமது அறிவு சம்பந்தமான விஷயங்களையும், நமக்குள்ள உறவு முறைகளையும் பேச நேரிட்ட போதிலும் அப்படிப் பேசும் சமயத்திலுங்கூட அவைகள் நமது ஆவிக்குரிய ஜீவியத்திற்கும், நமது தேசத்தில் திருச்சபையின் வாழ்வுக்கும் சம்பந்தப்படக்கூடிய அளவுக்குமட்டும் இருக்கப் பார்த்துக்கொள்ளவேண்டும். இவ்வாறு இம்மகாநாட்டில் சம்பந்தப்படும் ஒவ்வொருவரும் இது ஆத்மீக விஷயத்தையே முதலாவதாகவும் முக்கியமானதாகவும் கொண்ட ஒரு கூட்டமென்பதை தனித்தனியே உணர்ந்துகொள்வது அத்தியாவசியம்.

சபையார் கூட்டம்.

இரண்டாவதாக:- இங்கு குருமாரல்லாத ஒரு சபையாரின் கும்பாகக் கூடியிருக்கிறோம்.

குருக்கள் எனப்படுபவர் அம்மார்க்கத்தின் மூலாதார விஷயங்களையும், அடிப்படையான கருத்துக்களையும் நுட்பமாயாராய்ந்து, கற்றறிந்து, தங்கள் சொந்த நடக்கையில் முன்மாதிரி காண்பிக்கிறவர்களாயிருந்து, மற்றவர்களை அம்மதத்திற்கு இழுத்துக்கொள்ளக் கூடியவர்களாயும், மானிட ஜீவியத்தில் அம்மார்க்கம் செலுத்தும் சக்தியைக் காண்பிக்கிறவர்களாயும், அம்மதக் கோட்பாடுகளை ஸ்திரமாய் அப்பியாசிக்கிறவர்களாயுமிருக்க வேண்டுமென்று பிரத்தியேகப்படுத்தப்பட்டிருக்கின்றனர். தங்கள் சொந்த ஜீவியத்தில் கிறிஸ்துமார்க்கத்தின் முழு அர்த்தத்தையும், சாராம்சத்தையும் உணர்த்திக்காட்டி சபையார் பின்பற்றக்கூடிய சிறந்த முன்மாதிரி காட்டவேண்டியவர்கள். கிறிஸ்து மத அப்பியாசத்தில் சபையோருக்கு வழிகாட்டிகள்.

சுருக்கிச் சொல்லின், ஜனங்களை இறைவனின் திருப்பாதத் தண்டைக்கு வழிநடத்துவதே இவர்கள் பணிவிடை. இத்தகைய கல்வியிற் சிறந்தவரும் விசேஷ பயிற்சி பெற்றோரும், ஆத்தும ஞானத்தில் சிறப்புற்றோரும், ஆத்மீக சக்தி உடையோருமான சிலரைத் தெரிந்தெடுத்து கிறிஸ்தவ திருச்சபையில் "குருமார்" என்றும், "திருச்சபைப் பணிவிடைக்காரர்" என்றும் ஏற்படுத்தியுள்ளோம்.

ஆனால் இங்கே இம் மகாநாட்டின் அங்கத்தினருள் இவ்வித சிலாக்கியம் பெற்ற மேன்மையான கூட்டத்தைச் சேர்ந்தவர் யாருமில்லை. எல்லாவற்றையும் விட்டுவிட்டு மார்க்கத்தையே தம் ஜீவியத்தில் தொழிலாக எற்றுக்கொள்ளவேண்டுமென்று அவர்களைப் போல நம்மிலொருவரும் அழைக்கப்படவில்லை. குருமாரல்லாத சபையாராகக்கூடி வந்திருந்தபோதிலும், நான் முன் சொல்லியபடி கிறிஸ்தவ சபையராக, கிறிஸ்தவர்கள் என்ற நாமம் பூண்டவர்களாகக்கூடி வந்திருக்கிறோம். நமது மார்க்கத்தைக்குறித்து மற்றவர்களுக்குப் பிரசங்கிக்கவும், கிறிஸ்தவர்களின் ஆத்மீக தேவைகளுக்குப் பணிவிடை செய்யவுங் கூடிய போதகர்களாகவும், குருமார்களாகவும் திருச்சபையில் மிகப் பொறுப்பான உத்தியோகங்களை எற்றுக்கொண்டவர்கள் நம்மிலில்லையென்றாலும் இக்கூட்டத்தில் நாம் முக்கியப்படுத்தி ஆலோசிக்கும் விஷயங்கள் குருமார்களின் கூட்டத்தில் அவர்கள் ஆலோசிக்கும் விஷயங்களுக்கொத்தவைகளே. நோக்கத்திலும், எண்ணத்திலும், குருமார்களுக்கு விரோதமான கூட்டத்தாராய்க் கூடிவாராமல் குருமாரின் தாபந்தத்துக்கொத்த தாபந்தமும் கரிசனையுமுள்ளவர்களாகவே இங்கு கூடியுள்ளோம். அவ்விஷயங்களைப்பற்றிச் சிந்திக்க குருமாருக்குள்ள திறமையும் பயிற்சியும் நமக்கில்லாவிடினும், அவ்விஷயங்களையிட்டு அவர்கள் சிந்திப்பதற்குச் சற்று வித்தியாசமான முறையிலே சிந்திக்க நமக்கு அவகாசமுண்டு.

திருச்சபையில் உத்தியோகம் வகிக்கிறவர்கள் சில சமயங்களில் சில விஷயங்களைக் குறித்து ஆலோசனை செய்வதில் சற்று ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். ஆனால் நமக்கு அப்படிப்பட்ட கட்டுதிட்டங்கள் கிடையா. ஆதலால் தான் குருமாரல்லாதாரும் காலாகாலங்களில் ஒன்று சேர்ந்து மானிட ஜீவியத்தின் மேலான விஷயங்களைக்குறித்தும், ஆத்மீக விஷயத்தைக்குறித்தும், தேவனையும் அவருடைய ராஜ்யத்தையுங் குறித்தும் கலந்து பேசிக்கொள்ளுவது உசிதம். மத விஷயங்களைப்பற்றியாவது, வேதசாஸ்திர விஷயங்களைப்பற்றியாவது பேசி ஆலோசிக்க நமக்குத் தகுந்த பயிற்சியுமில்லையென்று ஒரு வேளை குருமார் எடுத்துக் காட்டலாம். மார்க்கவிஷயங்களில் போந்த அறிவற்றவர்கள், மேல் வேலைக்காரரைப்போல அரைநேரம் வேலை செய்பவர்களென்றும் ஈனம் செய்யப்பட

லாம். ஆனால் மார்க்க விஷயங்களில் நமக்குக் கரிசனையும், மார்க்க அப்பியாசத்தில் அக்கரையும், குருமாரல்லாதிருந்தும் திருச்சபையின் ஜீவியத்திலும், ஊழியத்திலும் பங்குபெற பாத்தியதையும், கடமையும் உண்டென்பதற்கையமில்லை. இதை யெவரும்மறுக்க முடியாது. குருமாரல்லாதோரும் திருச்சபையின் வாழ்வுக்காக உபயோகப்படுத்தப்படவேண்டும். அவர்களும் சபைக்குக் கொடுக்கக்கூடிய நன்கொடைகளுண்டு. திருச்சபையின் பிரமாண்டமான வேலையில் பங்குபெற நமக்கும் பொறுப்பு ஏற்பட்டிருக்கிறதென்கிற நம்பிக்கையுடன்தான் நாம் இம்மகாநாட்டைக் கூட்டியிருக்கிறோம். குருமாருக்கு விரோதமாக அல்ல; அவர்களுக்கு அக்கரையில்லாத விஷயங்களைப்பற்றிப் பேசுவதற்காகவும் அல்ல; அவ்விஷயங்களையிட்டுச் சிந்திப்பதினின்று குருமாரைத் தள்ளிவைக்கும் நோக்கமாயுமல்ல; குருமார் தங்கள் கூட்டங்களிலும், கூட்டுறவுகளிலும் எவ்விஷயங்களைப்பற்றிப் பேசி ஆலோசிக்கிறார்களோ அவ்விஷயங்களைப்பற்றியே நாமும் இச்சமயத்தில் ஆலோசிப்போம். ஆயினும் அவர்கள் பேசுவதற்குச் சற்று வித்தியாசமான முறையில் பேசி ஆலோசிக்கும் காரணமாகவே இங்கு கூடியிருக்கிறோம். நமது ஆத்தும ஜீவியத்துக்குச் சம்பந்தமான காரியங்களை சாதாரணமாகக் குருமார் கவனிக்கும் போக்குக்குச் சற்று வித்தியாசமான ஒரு போக்காய் நோக்கி விசாரணை செய்யவே குருமாரல்லாதோரான நாம் இங்கு கூடிவந்திருக்கிறோம். தேவனுடைய இராஜ்யத்தின் முன்னேற்றத்தைக் குறித்து நமக்கும் கரிசனையும், தாபந்தமுமுண்டு. அதில் நமக்கும் பொறுப்பு உண்டு என்ற ஒரு புது உணர்ச்சியின் மிகுதியினாலேயே இப்படி நாம் கூடி வரலாயிற்று. நம்முடைய சக்திக்கேற்றவாறு திருச்சபையின் ஜீவியத்திலும், அனுபவத்திலும், முன்னேற்றத்திலும் பங்கு பெறுவது நமது கடமை என்று நம்பியே கூடியிருக்கிறோம். இக்கூட்டத்தில் நமது நோக்கம், குருமார் கூட்டங்களின் நோக்கமாகவே இருக்கிறதென்பதை மறுபடியும் வற்புறுத்துகின்றேன்.

குருமாரின் நோக்கங்களுக்கும், நமது நோக்கங்களுக்கும், அவரது விருப்பங்களுக்கும், சபையாரான நமது விருப்பங்களுக்கும் வகையில் வித்தியாசமில்லை; அளவிலேயே வித்தியாசம் காணப்படக்கூடியது.

கடவுளுக்கடுத்த விஷயங்களில் குருமாருக்கிருக்கும் சிரத்தை யைவிட நமக்கிருக்கும் சிரத்தை குறைவுபட்டிருக்கலாகாது. யுத்தம் ஏற்படும் காலத்தில் பட்டாள சைனியங்கள் மாத்திரமல்ல, அதுவரை பட்டாளத்தில் சேராத ஜனங்களுங்கூட ஆயுதம் தரித்து போர்க்களத்துக்கேகும் அவசியம் ஏற்படுவதுபோல திருச்சபைக்கு அவசியம் நேரிடும் காலங்களில் குருமாரைப்போலவே நாமும் போர்வீரரென்றெண்ணிக்கொள்ளவேண்டும். அப்படிப்பட்ட ஒரு அவசியம் தற்காலம் திருச்சபைக்கு நேரிட்டிருப்பதால் இந்த நெருக்கடியில் நாம் உதவிசெய்யவேண்டிய அவசரத்தை உணர்ந்தே இம்மகாநாடு கூட்டப்பட்டிருக்கிறது. நம் உத்திரவாதத்தை உணர்ந்திருக்கிறோமென்பதற்கு இதுவே அத்தாட்சி.

அத்தியக்ஷாதீனத்து சபையார் சட்டம்.

மூன்ருவதாக, நாம் இங்கே திருநெல்வேலி அத்தியக்ஷாதீனத்துச் சபையோராகக்கூடி வந்திருப்பது ஒரு பெருஞ்சிலாக்கிய மட்டுமல்ல, அதைவிட ஒரு பெரிய உத்திரவாதமுமே. திருநெல்வேலி அத்தியக்ஷாதீனமென்றழைக்கப்படும், மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, ஆகிய மூன்று ஜில்லாக்களிலிருந்து கூடிவந்திருக்கிறோம். நமது தேச திருச்சபை சரித்திரத்தில் திருநெல்வேலி அத்தியக்ஷாதீனம் எப்போதும் மிக உன்னத ஸ்தானம் வகித்து வந்திருக்கிறது; வகித்துக்கொண்டுமிருக்கிறது. மற்றெந்தப் பாகத்திலும் இல்லாத விதமாய் மேற்கிலிருந்து மிஷனெரிமாரால் கொண்டுவரப்பட்ட கிறிஸ்துமார்க்கம் இப்பிராந்தியங்களில் வேரூன்றி நிலை பெற்றது. இந்தியா தேசத்தில் கிறிஸ்தவ முயற்சியின் பெரும்பலன்கள் இப்பாகங்களிலேயே கிடைத்தன. மற்றெந்த இடத்தையும் விட இவ்விடங்களிலேதான் சிறந்த அறுவடை கர்த்தருக்குக் கிடைத்தது. சுமார் 150 வருட காலமாய் திருநெல்வேலி அத்தியக்ஷாதீனம் இந்திய திருச்சபையில் எண்ணிக்கையிலும் தன்மையிலும் விசேஷித்து விளங்குகின்றது. இம்மூன்று ஜில்லாக்களிலும் ஏறக்குறைய 4 லக்ஷம் கிறிஸ்தவர்களிருக்கிறார்கள். (மொத்த ஜனத்தொகையில் 100-க்கு 7 பேர்). இவர்களில் நாலிலொரு பாகம் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள். இவ்வித கிறிஸ்தவ மாகாணம் வேறெங்குமில்லை.

இவ்வத்தியக்ஷாதீனத்தின் கிறிஸ்தவ பாரம்பரியம் எத்தன்மையதென்று பார்த்தாலோ அதுவும் மிக மேன்மையுள்ளதே. பலமும் வீரத்தனமுள்ளதாயிருந்தபோதிலும் எழுமையும், வைராக்கியமும் நிறைந்த பாரம்பரியம். அந்நிய நாட்டிலிருந்து வந்த போதகர்களும் சுதேச சுவிசேஷ போதகர்களும் தங்களை ஒறுத்துச் செய்த தியாகத்தினால் ஏற்பட்ட ஓர் பாரம்பரியம்.

ஆங்கிலேய சபை, திருநெல்வேலி ஜில்லாவில் கனம் சுவார்ட்ஸ் ஐயர் 1771-ல் முதல் முதல் திருநெல்வேலியைப் பார்க்க வந்தபோது உண்டானது.

அக்காலந் தொட்டு இக்காலம் வரை நீண்ட தொடர்ச்சியாய்ச் சிறந்த மிஷனரிமார், குருமார், அத்தியக்ஷர்மார் எத்தனையோபேர் இருந்து வந்திருக்கின்றனர்.

Pope, Caldwell, Sargent, John Thomas, Tucker, Samuel Morley (1896-ல் திருநெல்வேலியின் முதல் அத்தியக்ஷராகப் பிரதிஷ்டை பண்ணப்பட்டவர்.) Sharrock, Billing, Margoschis, Walker, Carr ஆஹா! இவர்களைவிடச் சிறந்த மிஷனரிமாரின் வரிசை வேறெங்குமுண்டோ! V. வேதநாயகம், அருளப்பன், வேதநாயகம், சந்தோஷம், P. Abraham, Devanayagam, Veeravagu, Vethanayagam, P. G Simeon, Rao Saheb, C. S. Paul, இவர்களுக்கொத்த இந்திய குருமாரும், சுவிசேஷகரும் வேறெந்தப் பிராந்தியத்தில் தோன்றினர்!

இம்மாதிரியான கிறிஸ்தவ ஊழியர் ஒரு ஜில்லாவிலும் அத்தியக்ஷாதீனத்திலும் சேர்ந்திருப்பது எவ்வளவு பெருமை! இது சாதாரணமான ஒரு சிலாக்கியமுமல்ல; சாதாரணமான உத்தரவாதமுமல்ல. நமது தேசத்தின் இதர பாகங்களிலிருக்கும் கிறிஸ்தவர்களைக்காட்டிலும் திருநெல்வேலி அத்தியக்ஷாதீனத்துக் கிறிஸ்தவர்களான நாம் நீடித்தகாலக் கிறிஸ்தவ அனுபோகமும், விசேஷித்த கிறிஸ்தவ அனுபோகமும் பெற்றிருப்பதன் பொருட்டு அதற்கேற்க நடந்துகொள்வது நமது மேல் விழுந்த பாரம். இப்பிராந்தியக்

கிறிஸ்தவ பாரம்பரியத்தை ஆத்மீகமாகவும், வைராக்கியமாகவும், பரிசுத்தமாகவும் காப்பாற்றிக்கொள்வது நமது பெருங்கடமை. திருநெல்வேலி அத்தியக்ஷாதீன சபையார் இம்மாதிரி மகாநாட்டைக் கூட்டி அதில் நமது ஆத்துமாக்களுக்கு அருமையானதும், முக்கிய அவசியமானதுமான அரிய விஷயங்களையும், இந்நாட்டில் தேவனுடைய ராஜ்யம் மகிமைப்படுவதற்கேற்ற விஷயங்களையும், சிந்திப்பது தகுதியும் அத்தியாவசியமுமானதென்றே எனக்குத் தோன்றுகிறது.

மகாநாட்டில் யோசிக்கவேண்டியதென்ன?

இம்மகாநாட்டில் நாம் யோசிக்கவேண்டியதென்ன? அவை பின்வருமாறெனலாம்:- ஐந்து தலைமுறையாகத் திருநெல்வேலி பிராந்தியத்தில் கிறிஸ்தவர்களாயிருக்கிற நாம் பெற்றிருக்கும் ஆவிக்குரிய அனுபவமென்ன? ஒரு நூற்றாண்டுக்குமேல் கிறிஸ்தவ ஜீவியம் செய்திருக்கும் இச்சபையின் ஆத்தும முன்னேற்றம் எவ்வளவு? திருச்சபையாகவும், ஜனசமூகமாகவும், கிறிஸ்துமார்க்கத்தினின்று நாம் பெற்றிருக்கும் ஆத்தும நன்மைகளென்ன? தற்காலத்துக்கும் வருங்காலத்துக்கும் நமக்குத் தேவையானவை எவை? திருச்சபைக்கும் நம் தேசத்துக்கும் நம்மைச் சுற்றியிருக்கும் ஜனங்களுக்கும் நாம் நிறைவேற்றவேண்டிய கடமைகள் யாவை? இதைப் பற்றிய உத்தரவாதத்தை நாம் எம்மட்டும் உணர்ந்திருக்கிறோம்? இம்மகாநாட்டில் நாம் முக்கியமாய்ச் சிந்திக்கவேண்டிய விஷயங்கள் இவைகளே தற்கால உலக நிலைமையைக் கவனித்தால் உலகத்தில் எங்கேயோ, எவ்விதமாகவோ, ஒரு பெருந் தவறு ஏற்பட்டிருக்கிறதென்பது நன்கு விளங்குகின்றது. தற்கால உலக நிலமை இப்பிரபஞ்சத்தின் சிருஷ்டி கர்த்தா அதைச் சிருஷ்டித்த நோக்கத்தை நிறைவேற்றக்கூடியதாயில்லை என்பது நிச்சயமே.

திருச்சபை நிலைமை.

உலகமெங்குமுள்ள கிறிஸ்தவ சபையைக் கவனித்தாலும் அங்கும் திருச்சபை தான் நாட்டப்பட்ட பெரும் நோக்கத்தை நெகிழவிட்டு விட்டதென்றே தோன்றுகிறது. உலகத்துக்கு உப்பாகவும், வெளிச்சமாகவும் மானிட சமூகத்தை ரட்சிப்பதற்காகவும் ஸ்தாபிக்கப்பட்ட கிறிஸ்தவ திருச்சபை, அந்நோக்கத்தைத் தவற

விட்டதென்றே சொல்லவேண்டியதிருக்கிறது உலகத்தின் இதர பாகங்களைப்போலவே நமது தேசத்திலும் ஜனசமூக தேசிய நிலைமைகள் சரியாக இல்லை. மிதமிஞ்சிய வெளிப்பேச்சுகளிருந்த போதிலும் உள்ளபடி அப்பேச்சுகள் காரியசித்தியடைவதில்லை. ஜனசமூக வாழ்க்கையைச் சீர்திருத்துவது, ஏழைகள் நிர்ப்பந்தர் முதலியோரை உயர்த்துவது, ஒடுக்கப்படுகிறவர்களை விடுவிப்பது, விழுந்தவர்களைக் கைதூக்குவது என்ற விஷயங்களைப்பற்றிப் பல பேச்சுகள் பலவிடங்களில் பேசப்பட்டபோதிலும் இவ்விஷயங்களுக்காக ஊக்கமாய்ப் பாடுபடுவோர் மிகச் சொற்பமென்றே சொல்லலாம்.

உலகின் மற்றப் பாகங்களிலுள்ள திருச்சபையைப்போலவே நமது தேசத்திலும், நமது பிராந்தியத்திலுமுள்ள திருச்சபையிலும் வியர்த்தத்தின் அறிகுறிகளே காணப்படுகின்றன. மனுஷரின் இருதயங்களையும், ஜீவியங்களையும் கவர்ந்துகொள்ளும் ஒரு சக்தியின்மை; உலகத்துடன் சம்பந்தங் கலந்துகொண்டு உலகத்துடன் ஒப்புரவாகப் பிரயாசப்படுவது; தேசிய ஜன சமூக விஷயங்களில் மனுஷரின் ஆலோசனையை தேவனுக்கு நேராக வழிநடத்த முடியாதிருத்தல்; இவை அபஜெயத்தின் அறிகுறிகளேயன்றி தன்னுடைய ஆண்டவரின் வல்லமையில் நிலைத்திருக்கும் திருச்சபைக்குரிய குணதிசயங்களன்று.

நம்மைநாமே நோக்கிப் பார்த்தாலோ, தென்னிந்திய கிறிஸ்தவர்களில் பெரும்பான்மையோர் எச்சபையைச் சேர்ந்தவர்களாயிருப்பினும் தங்கள் ஆத்தும ஜீவியத்தில் பெலன்குன்றி ஆவியின் அருளற்ற ஜீவியம் செய்கிறவர்களாகவே காணப்படுகின்றனர். அவர்களிற் சிறந்தவர்களென்னப்படுகிறவர்களின் ஜீவியங்களிற்கூட ஆத்மீக வல்லமையும் ஆத்துமாக்களைக் கவர்ந்துகொண்டு அவைகளை உயர்நிலைக்கு வழி நடத்தக்கூடிய சக்தியும் வெகுவாயிருப்பதாகத் தெரியவில்லை. தொன்று தொட்டு அப்போஸ்தலர் காலந்தொடங்கி இதுகாறும் கிறிஸ்தவ அனுபவத்திலும், ஜீவியத்திலும் காணப்படவேண்டிய இலக்ஷணங்கள் இரண்டு.

1. மீட்பைப்பற்றிய நிச்சயம்:— பாவமன்னிப்பு மாத்திரமல்ல, கிறிஸ்துவின் மரணத்தாலும், உயிர்த்தெழுதலினாலும் பாவத்திலிருந்து விடுதலையாக்கப்பட்டு ஒரு புது ஜீவனடையப் பெற்றிருக்கின்றோமென்ற உணர்ச்சி.

2. ஆத்தும வல்லமை:— பெந்தேகோஸ்தில் அளிக்கப்பட்ட பரிசுத்தாவியானவரின் நடத்துதலினாலுண்டாகும் ஆத்மீக சக்தி இவைகளில் முந்தியது விசுவாசியின் அந்தரங்கஜீவியத்திலேற்படும். பிந்தியது விசுவாசியின் பகிரங்க ஜீவியத்தில் வெளிப்பட்டு இதர ஜீவியங்களையும் அசைக்கக்கூடியதாயிருக்கும்.

வல்லமை காணவேண்டும்

ஒரு ஜீவியத்தில் ஆவியின் வல்லமையிருந்தால் ஜனங்கள் அதைக் காணக்கூடும். ஆனால் இக்காலத்தில் புறமதஸ்தர் ஜீவியங்களில் இம்மாதிரி வல்லமையைக் காண்கிறார்களா? கடவுளுடைய தெய்வீக வல்லமையே இவர்களுக்குள் கிரியை செய்கிறதென்று அவர்கள் ஒப்புக்கொள்ளக் கூடியதாயிருக்கிறதா? இல்லையென்றே சொல்லவேண்டும். நமது ஜீவியங்கள் பரிசுத்தாவியால் நிரப்பப்பட்டு கடவுளுக்காகப் பல காரியங்களைச் செய்ய வல்லமையுள்ளவைகளாகயில்லை. திட நம்பிக்கையும் நல் நோக்கங்களும்கூட இல்லாத ஜீவியங்களாகத்தானிருக்கின்றன. உலக முழுவதிலும், உலகத்தின் எப்பாகத்திலுமுள்ள கிறிஸ்தவர்களெல்லோரும் இவ்வல்லமையை மீண்டும் பெற்று, முழுத்திருச்சபையும் இவ்வல்லமை வேலை செய்யுங்கருவியாகி, ஒவ்வொரு கிறிஸ்தவனும் கடவுளின் வல்லமையை ஊடு செலுத்துபவனாயிராவிட்டால் இவ்வுலகத்திற்கு வேறு நம்பிக்கையில்லை. திருச்சபை இவ்வுலகத்திலிருந்தும் பிரயோஜனமில்லை. ஆகையால் தற்காலத்தில் எல்லாவற்றுக்கும் மேலாக தேவையாயிருப்பது ஒரு ஆத்தும சீர்திருத்தம்; ஒரு ஆத்தும எழுப்புதல்; அதாவது பரிசுத்தாவியை மீண்டும் பெறுதல்; கடவுளுடைய வல்லமையை மீண்டும் பெறுதல். கடவுளுடைய வல்லமையை மீண்டும் கைப்பற்றிக்கொள்ளுதல். ஆத்தும உணர்ச்சியில் முன்னேற்றம். முதலாவதாக நம்முடைய தனி ஜீவியங்களில் உன்னதத்திலிருந்து வரும் வல்லமையால் நாம் நிரப்பப்படாவிடில் தேச ஜீவியத்தில் நமது ஸ்தானத்தைப்பற்றியும், ஜன சமூக வாழ்க்

கையின் தேவைகளைப்பற்றியும், பொருள் நிலையில் சீர்திருத்தலைப் பற்றியும் பேசிக்கொள்வது வீண். நமது தனி ஜீவியங்களில் நாமொவ்வருவரும் அவ்வல்லமையைப் பெறுவோமானால் திருச்சபையும் அவ்வல்லமையைப் பெற்றுக்கொள்ளும்.

யோசனை செய்யக் கற்றுக்கொள்ளவேண்டும்.

பெரிதும் முக்கியமுமான நமது அவசியம் ஆத்துமத்துக்கடுத்தது. அதற்கடுத்தாப்போல் முக்கியமான அவசியம் அறிவுக்கடுத்தது. அது என்னவெனில், விஷயங்களைப்பற்றி யோசனைசெய்ய நாம் கற்றுக்கொள்ளுவதே. படிப்பாளிகளும் அறிவிற்சிறந்தவர்களும் நிறைந்தவோர் சபையில் இப்படிப் பேசுவது அடாதென்று தோன்றினும், சற்று நேரம் யோசித்துப் பார்க்கில், தென் இந்தியக் கிறிஸ்தவர்கள் அறிவுக்கடுத்த விஷயங்களில் இதுவரை விசேஷித்துச் செய்தது ஒன்றுமில்லையாதலால், விஷயங்களைப்பற்றி தாங்களே யோசிக்க ஜனங்கள் பழக்கப்படுதல் அவசியம் என்று நான் சொன்னதில் தவறொன்றும் இல்லை என்பது உங்களுக்கு விளங்கும். இதுவரை இந்தியக் கிறிஸ்தவர்களுக்கு அறிவு சம்பந்தமாய் வெகு நஷ்டம் உண்டாக்கிக்கொண்டு வந்திருக்கிற விஷயம் என்னவெனில், தங்கள் முன் யார் எதை வைத்தாலும் அதை விஸ்வஸம் என்று ஒப்புக்கொள்ளுவது. சுற்றிலும் அதைப் பரீட்சித்துப்பார்ப்பதும் அதைப்பற்றி விசாரணை செய்வதும் கிடையாது.

இந்தியக் கிறிஸ்தவர்களாகிய நாம் நமது சொந்தப் புத்திக் கூர்மையினால் இதுவரை எந்த விஷயத்தையும் கிரகித்து அதைப் பற்றி புதிதாக எதையும் கண்டுபிடித்து வெளிப்படுத்தாததற்கு இதுவே காரணம். தன் முன் எதை வைத்தாலும் அதை உட்கொள்ளுவது சில சமயங்களில் அவசியமாகவேயிருக்கலாம். ஒரு சிறு குழந்தை தன் தாயார் தனக்குக் கொடுக்கும் யாவற்றையும் அருந்தி உட்கொள்ளுவது அத்தியாவசியம்; அது வளரவேண்டுமானால் அது அவைகளைப்பற்றி கேள்விகள் கேட்டுக்கொண்டிருப்பதில் பயனில்லை. ஆனால் அச்சிறு பிள்ளை வளர்ந்து பெரியவனான பின்னும், தனக்கு முன் வைக்கப்பட்ட எதையும் யோசனையின்றியும், பகுத்தறிவின்றியும் உட்கொண்டுகொண்டேயிருந்தால் அது அவனுக்குக் கெடுதியாகவிருக்கும். சில பதார்த்தங்கள் அவனுக்கு

நல்லதல்ல. அவைகளை அவன் விலக்கிவிடவேண்டும். வளர்ச்சியடையும் எந்த ஜன சமூகமும், எந்தச் சிறு மதலைச் சபையும் இப்படியே. சில காலம் வரை அது தனக்குக் கொடுக்கப்படுகிற அறிவுக்கடுத்த ஞானஆகாரம் முழுவதையும் உட்கொள்ளுவது அவசியமே; ஆயினும் காலம் கடந்தபின், சரியான பருவம் வந்தபின்னும், அப்பிரகாரமாகவே பகுத்தறிவின்றி நடந்துகொண்டால் நன்மையைவிட தீமையே ஏற்படக்கூடும். அப்படி சரியான பருவம் வந்தபின்னும் அறிவுக்கடுத்த விஷயங்களில் பகுத்தறிவின்றி நடந்துகொண்டு வரும் ஜனசமூகமும், சபையும், இன்னமும் குறுங்கமுசு போட்டுக்கொண்டு விளையாடித்திரியும் சிறுபிள்ளைக்குச் சமானமேயாகும். ஐந்து தலைமுறைகளாகக் கிறிஸ்தவர்களாயிருக்கிற நாம், நம் சொந்த முயற்சியைக்கொண்டு அறிவை விருத்தி செய்யக்கூடிய நூல்களை உண்டுபண்ணியிருக்கிறோமா? உலகமெங்குமுள்ள திருச்சபைக்குப் பிரயோஜனமாயிருக்கக்கூடிய யாதொரு புதுவிஷயத்தை யாவது உண்டாக்கியிருக்கிறோமா? அல்லது கிறிஸ்தவ மார்க்க விஷயங்களை நம் தேசத்தவர் இலகுவில் அறிந்துகொள்ளக்கூடிய முறையில் திருப்பி அமைக்கப் பிரயாசப்பட்டிருக்கிறோமா? இப்படிச் செய்யாததற்குக் காரணம் நாம், இன்னும் யோசனை செய்ய, ஒரு விஷயத்தைப்பற்றி ஆலோசிக்க, பிறர் அவ்விஷயத்தைப்பற்றிச் சொல்லுவதை விடுத்து நாமே அவ்விஷயத்தைப்பற்றி புதிதாய் சில அம்சங்களைக் கண்டுபிடிக்க, இன்னும் நாம் கற்றுக்கொள்ளாததே. மேற்கிலிருந்து அச்சிட்டு வரும் யாவற்றையும் ஒப்புக்கொள்ள தீவிரமாயிருக்கிறோமே தவிர, அவைகளை நமது புத்திக் கூர்மையினால் பரீட்சித்து அவைகளை உட்கொண்டு நம்முடையதாக்கிக் கொண்டு, அதிலிருந்து இன்னும் புதிதான விஷயங்களை யோசித்து வெளிப்படுத்தப் பிரயாசப்படுவதில்லை.

அநேக வருஷங்களாய் கல்லூரிகளிலும் வேத சாஸ்திர வகுப்புகளிலும் படித்து வருகிற நமது குருமாருங்கூட இன்னும் அறிவுக்கடுத்த விஷயங்களில் இம்மாதிரியே பகுத்தறிவற்றிருக்கிறார்கள் என்பது விசனிக்கப்படத்தக்க காரியம். இவர்களுக்கு நமது வேதசாஸ்திரக் கல்லூரிகளில் மேற்கத்திய சாஸ்திரிகள் எழுதி வைத்த புஸ்தகங்கள் புகட்டப்படுகின்றன. அவைகளைப் பாராயணம் செய்து, தங்கள் பரீக்ஷைகளில் தேறி, பெரும் பட்டங்களைப் பெற்றுத் திரும்புகின்றனர். இதில் யாதொரு தவறில்லை.

ஆனால் வேதசாஸ்திர கல்லூரியிலிருந்து வந்தபின் அங்கு படித்த வைகளை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவோ, அவைகளை அஸ்தி பாரமாகக்கொண்டு மேலும் மேலும் தாங்கள் சாஸ்திர அறிவை விருத்தி செய்துகொள்ளவோ, தங்கள் புத்தியை உபயோகப்படுத்தி இன்னும் சில விஷயங்களை வெளிப்படுத்தவோ, அவர்கள் பிரயாசப் படுவதில்லை.

நமது சபையில் பெரும்பாலோர் அதிகம் படியாதவர்கள். ஆயினும் உலக அநுபமும் மார்க்க அநுபவமும் உடையவர்கள். தங்கள் எளிமையிலும் துன்பத்தின் மத்தியிலும் விசுவாசத்தை நெகிழவிடாதிருப்பார்கள்.

தேவனைப்பற்றிய அறிவையும், தாங்கள் கற்ற சாஸ்திரக் கல்வி யையும், தங்கள் ஆத்தும ஜீவியத்திலும் தங்கள் அறிவுக்குகந்த ஜீவியத்திலும் தங்களுடையதாக்கிக்கொண்டவர்கள்தான் இத் தகைய ஜனங்களுக்கு உதவிசெய்யமுடியுமே தவிர, பிறருடைய யோசனையைமட்டும் கற்று வைத்திருப்பவர்கள் உதவி செய்ய முடியாது.

ஆயினும் குருமாரைக் குறைகூறுவதில் யாது பயன்? நம்மு டைய நிலைமை இவ்விஷயத்தில் எப்படி? நாம் நம் மதவிஷயமாய் ஏதாவது யோசிக்கிறோமா? இதுவரை நமக்குள் யாதாமொரு Layman ஆத்தும விஷயங்களைப்பற்றிப் படித்து, அவ்விஷயங்களை தன் புத்தியினால் கிரகித்து, தன் யோசனையின் பயனாக ஏதாவது புதுக்காரியங்களைக் கண்டுபிடித்து வெளிப்படுத்தியது உண்டா? இல்லையென்றேயல்லவா சொல்லவேண்டியிருக்கிறது. நம்மில் சிலர் நமக்குப்பிரியமான கணித சாஸ்திரமோ, ரசாயன சாஸ்திரமோ, தத்துவ சாஸ்திரமோ, அல்லது வேறெந்த சாஸ்திரமோ, இவை களைப் படித்து பாண்டித்தியமடைந்து, அவைகளைப்பற்றி சிற்சில புது விஷயங்களைக் கண்டுபிடித்து வெளிப்படுத்துவது உண்டு. ஆனால் மார்க்க விஷயங்களை வெளிப்படுத்திக் காட்டப் பிரயாசப்படு பவர் நம்மில் இல்லையென்றே சொல்லலாம்.

எந்த விஷயத்தையும் பரீட்சித்துப் பார்த்து, நமது சிந்தனைகளை உபயோகித்து, காரியங்களைக் கிரகித்துக்கொள்ளப் பிரயாசப் படுவது அத்தியாவசியம். ஆகையினால் தான் யோசிக்கப் பழகுவது நமக்கு அவசியமான இரண்டாம் விஷயம் என்று நான் வற்புறுத்தலானேன். இப்படி, நமக்கு அவசியம் தேவையானவைகள் ஆத்தும எழுப்புதல் ஆவிக்கடுத்த யோசனை செய்யப் பழகுதல்.

கடவுள் இம்மகாநாட்டில் நம்முடன் இருந்து தம் திருவருளினால் நம்மை நடத்துவாராக.

ஸ்ரீமதி டாஸ் கிருஷ்ணய்யா அம்மாள் வாசித்த கட்டுரையின் சுருக்கம்.

நமது கிறிஸ்தவ பெண்கள்.

கிறிஸ்தவர்களான விசுவாசக் குடும்பத்தாராக, நாமெல்லாரும், இன்று ஒன்றுகூடியிருக்கிறோம். நமது புத்திக்கெட்டாத தமது மகத்தான காருண்ணிய கிருபையினால், நமது நாதராகிய இயேசு கிறிஸ்து, தமிழ் நாட்டில் அற்பரும், அபாத்திரருமாகிய நம்மை, அன்போடு அழைத்துத் தெரிந்தெடுத்திருக்கிறார்.

அறிவீனத்திலும், அந்தகாரத்திலும், மாண இருளிலும் இருந்த நம் பிதாக்களுக்கு, ஜெகஜோதியாகிய சிலுவையின் நாதரது வெளிச்சம் பிரகாசித்தது. அவர் வெளிச்சத்தில், நாம் வெளிச்சம் கண்டோம்.

ஏன் ஆண்டவர் நம்மைத் தெரிந்தழைத்தார்? அவர் அழைப்பின் திவ்ய திரு நோக்கத்தை உணர்ந்து, அதற்கேற்க ஜீவியாவிட்டால், கிறிஸ்துவுக்குள் நமக்குரிய சுதந்தரத்தை இழந்துவிடுவோமே. நாம் எச்சரிக்கையாயிருப்போமாக.

கிறிஸ்து நம் குல தெய்வம் அல்லது கிறிஸ்துமார்க்கம் ஏதோ நம் சாமர்த்தியத்தினால், அல்லது புத்திக்கூர்மையினால், சம்பாதித்துக்கொண்ட சுய சொத்து, என்பதுபோல பாராட்டிப் பேசுவது

மோசமான காரியம். நம்முடைய அபாத்திர தன்மையினிமித்தம், மற்றவர்கள்முன், கிறிஸ்துவின் நாமத்தால், நம்மை வருணிக்க, நமக்கு நாவு கூசவேண்டும். நமக்குக் கிடைத்த கிருபை, அவர்களுக்குக் கிடைத்திருந்தால், நம்மைவிட அவர்கள், எவ்வளவு உத்தம பக்தர்களாயிருந்திருப்பார்களென்று, நாம் உணரவேண்டும்.

பெண்கள் கல்வியில், கடவுளுடைய கிருபையால், விசேஷமாக கிறிஸ்தவ பெண்களாகிய நாம், முன்நிற்கிறோம். யாருக்கு அதிகம் கொடுக்கப்பட்டிருக்கிறதோ, அவர்களிடத்தில் அதிகம் கேட்கப்படும். நம் நாட்டிலுள்ள பெண்களுடைய அறிவீனத்தை, நம் அவமானமாகப் பாவித்து, ஆத்தும சரீர சத்தியங்களின் அறிவில், அவர்களும் பங்குபெற நாம் பிரயாசப்படுகிறோமா, அல்லது நம் பாடு தீர்ந்தால் போதுமென்று, தன்னயங்கொண்டு, நம் சுய ஜனங்களுக்கு விலகி ஜீவிக்கிறோமா? கிறிஸ்தவர்களாகிய நாம், கடவுளுடைய வழியில் நடக்கவும், அவரை மகிமைப்படுத்தவும் தவறியபோது, நம்மை வெட்கப்படுத்தி, மனதைக் குத்தி, நம்மைச் சீர்திருத்தும்படி, கடவுள் புறமதத்திலுள்ள ஸ்திரிகளைக் கொண்டு, தம் மகிமையை வெளிப்படுத்துகிறார். கிறிஸ்துபெருமானை நன்கு அறிந்த நாம், கண்ணாரக் காண்கிறபடி, மலைப்பிரசங்கத்தின் சாரமாகிய பகைவர்மேல் அன்பும், சந்தோஷமாய் துன்பத்தை பொறுத்தலும், தீமை செய்வதற்குப் பதிலாக நன்மை செய்வதுமாகிய அகிம்சா முறையை, நாம் மறந்தலைகிறதைக் கண்ட கடவுள், தன் சிலுவையைச் சுமக்கும்படி, புறமத ஸ்திரிகளைத் தெரிந்து கொண்டார்.

சென்ற காலத்தில் நமது தேச நன்மைக்காக தொண்டு செய்த எத்தனை பெண்கள் சர்க்காரால் அடி மிதி அனுபவித்து சிறைக்குச் சென்றார்கள். இப்படிப்பட்டவர்களை, நம்முடைய தர்க்கத்தினால், அல்லது நம்முடைய சாமர்த்தியத்தினால், அல்லது நம்முடைய புத்திக்கூர்மையினால், அவர்கள் கிறிஸ்துவை நம்பச் செய்துவிடுவோமென்று, நாம் எதிர்பார்க்கிறதற்கு, தற்காலத்தில் இடமில்லை. நம்முடைய ஜீவியம் பிரத்தியட்சமாய் அவர்களுக்குத் தெரியட்டும். நம்முடைய ஜீவ வெளிச்சம், அவர்களுக்கு முன்பாகப் பிரகாசிக்கட்டும். கடவுளின் ராஜ்ஜியம் பேச்சில் அல்ல, வெளித்தோற்றத்திலுமல்ல, வல்லமையிலே இருக்கிறது.

வெறும் மூளையறிவு கடவுளுக்குப் பிரியமில்லை. உள்ளத்தில் உண்மையிருக்கவே, கடவுள் விரும்புகிறார். ஆண்டவரது பெருந் தன்மையை, விவரிக்க வல்லவர் யார்? ஆண்டவரை நன்றாய் அறிந்திருந்தும், அவருக்குத் தங்களை ஒப்புக்கொடாதவர்களிலும், அவரைச் சரியாக அறியாத நிலையிலிருந்தும், அவருக்குத் தங்களை ஒப்புக் கொடுக்கும் மக்களே கிறிஸ்துமார்க்கத்தின், உட்பொருளைக் காட்டுகிறவர்களென்று C.F. Andrews ஐயர் எழுதியிருக்கிறார். வருஷத்திலே ஒரு வாரத்தைக் குறிப்பிட்டு, சுவிசேஷ வாரமென்று பெயரிட்டு, வெகு விமரிசையாக சுவிசேஷ வேலை செய்யப் புறப்படுகிறோமே. தெய்வ சித்தம் நிறைவேறவும், கடவுளுடைய ராஜ்ஜியம் இந்த பூமியிலேயே ஸ்தாபிக்கப்படவும், நாம் பிரயாசப்படுவது அல்லவோ சுவிசேஷ வேலை. உம்முடைய ராஜ்ஜியம் வருவதாக என்று ஜெபிக்க, தம் சீஷருக்குக் கற்றுக்கொடுத்தாரே. அவருடைய ராஜ்ஜியம், இப் பூமியிலேயே, இப்போதே, வரவேண்டுமென்று, நாம் எதிர்பாராவிட்டால் கர்த்தருடைய ஜெபத்தைச் சொல்வதில் என்ன பிரயோஜனம்?

நம்முடைய அத்தியட்சாதீனத்தில் இருக்கிற, பெண்கள் ஒவ்வொருவரும், தரித்திரத்திலும், அறியாமையிலும் மூழ்கியிருக்கும், நம் ஏழைச் சகோதரிகளுக்குச், சகாயராக நின்று, அவர்களுடைய அறியாமையையும், தரித்திரத்தையும் போக்க, நாடித்தேடி, உழைப்பது, சுவிசேஷ வேலையல்லவா?

கிராம சகோதரிகளின் அறிவீனம் இப்படியிருக்க, ஆங்கிலக் கல்வி கற்ற நம், பெண்கள், தங்களைப்போல ஆங்கிலக் கல்வி கற்றவர்களோடு மட்டும், சகவாசம் செய்து, ஆங்கிலக் கல்வியில்லாத, இந்த சகோதரிகளுக்கு விலகி, ஜீவியம் செய்து, தங்களை வேறே ஜாதியாகப் பிரித்துக்கொள்வதினால், சுவிசேஷ வேலைக்கு எவ்வளவு தடை உண்டாகிறதென்பதை நாம் சரியாய் ஆராய்ந்தறிகிறதில்லை.

எத்தனை கிறிஸ்தவ குடும்பங்களில் தங்கள் பிள்ளைகள் பேசப் படிக்க ஆரம்பிக்கும்போதே, தங்கள் சொந்த தாய் பாஷையில், அம்மா அப்பா என்று தங்களைக் கூப்பிடுவதை விரும்பால், mummie daddie என்று கூப்பிடும்படி சொல்லிக்கொடுத்துப் பழக்கிவிடுகிறார்கள். இந்த அந்நிய பதங்கள்தான் இவர்கள் காதுகளுக்கு இனிமை

யாகிவிட்டன. என்ன நம் அடிமைத்தனம்! சில கிறிஸ்தவ வீடுகளில் ஆங்கிலத்தை தங்கள் பிள்ளைகள் சிறுவயதுமுதல் தாய்ப்பாஷையாகப் பேச கற்பித்து, சுயபாஷை நன்கு அறியாத தங்கள் பிள்ளைகளை, தங்கள் சுய நாட்டாருக்கு அந்நியராக்கிவிடுகிறார்கள். இப்பிள்ளைகள் வளர்ந்து, ஆங்கிலம் அறியாத தங்கள் சுயநாட்டாருக்கு, எவ்விதம் சேவகம் செய்வார்கள்?

இன்னொரு முக்கியமான காரியத்தையும் இங்கு கவனிப்போம்.

கிறிஸ்து மார்க்கம் அந்நிய மார்க்கம் என்ற அபிப்பிராயம், நமது தேசத்தினருக்குள் பலமாய், குடிகொண்டிருக்கிறது. அவர்களுடைய இந்த அபிப்பிராயம் தவறு என்று நாம் உணர்ந்தால், அவர்களுடைய தவறான அபிப்பிராயத்தை மாற்றி, சத்தியத்தைப் பரவச்செய்ய, நாம் வெகு கவலையாய் நடந்துகொள்ளவேண்டும். இதற்கு ஏதுவான ஒன்றையும், நாம் அசட்டை செய்யலாகாது. நம் பழக்கவழக்கங்களெல்லாம், சத்தியத்திற்கு சாட்சி பகரவேண்டும். எத்தனையோ கிறிஸ்தவ ஆலயங்கள், புதிதாகக் கட்டப்பட்டு, பிரதிஷ்டையாகிறதைப்பற்றி, அடிக்கடி கேள்விப்படுகிறோமல்லவா? நமது இந்து ஜனங்கள் மனதைக் கவர்ந்து, அவர்களுக்கு ஆத்மீக கிளர்ச்சி உண்டுபண்ணும், அழகிய சிற்ப முறை, நம் தேசத்தில் சிறந்து விளங்கும்படி, கட்டப்படாமல், ஏன் குளிர் நிறைந்த மேல் நாடுகளில் வசிக்கும் முறைப்படிக் கட்டிக்கொள்ளுவதுபோல் கட்டப்படவேண்டும்? நமது பக்திக்கடுத்த வழி வகைகள், நமது ஜனங்களுக்கு இலகுவாக விளங்கும் இயற்கை முறையின்படி, அவர்களைப் பரவசப்படுத்தும் முறையின்படி, இருக்கலாமே.

பெண்களாகிய நமக்கும் இந்த ஆலய கட்டுமானங்களுக்கும் என்ன சம்பந்தமென்று நினைப்பீர்களோ? அழகுக்கும் அலங்காரத்துக்கும் சிற்பமுறைகளுக்கும் பெண்களாகிய நாமல்லவோ நல்ல ஆலோசனை சொல்லக்கூடியவர்கள். எப்படிப்பட்ட அழகிய சிற்ப முறை நம் சாதாரண இந்து ஜனங்களைக் கவரச்செய்யக்கூடியதென்று, பெண்கள் தான் ஆண்களைவிட நல்ல ஆலோசனை சொல்ல முடியும். ஆகையினாலே நம்முடைய அத்தியக்ஷாதீன கூட்டங்களில் பெண்களாகிய நாம் அங்கத்தினராக இருக்க முயற்சி எடுத்து

இப்படிப்பட்ட காரியங்கள் யோசனைக்கு வரும்போது நம்முடைய ஆலோசனையைக் கேட்கும்படி செய்துவிடலாம்.

அவசரமில்லாத வித்தியாசங்களினால் நம் சுய ஜனங்களிலிருந்து, நம்மைப் பிரித்துவிட்டோம். பக்தி விஷயமாக, நாம் உபயோகிக்கும் பதங்கள் வித்தியாசம். இப்பேர்ப்பட்ட அந்நிய ஆசாரங்கள், பேச்சு, பாட்டுகள், நமக்குப் பல தலைமுறைகளாக, வழக்கமாய்ப் போனதால், மிக இனிமையாயும் அருமையாயும் போய்விட்டன. அந்நியநாட்டு இராகங்கள்தான், நம் காதுக்கினிமையும் மனதிற்குப் பரவசமும் ஆகிப்போயின. பூர்வ காலங்களில் மேல்நாட்டிலிருந்து வந்த, ஐரோப்பிய குருமார், பிரசங்கிகள், பக்தர்கள், அநேக விஷயங்களில், நமக்கு நன்மை செய்திருக்கிறார்கள், என்பதற்கு சந்தேகமில்லை. கிறிஸ்துவை அறியவும், அவர் சிலுவையின் அன்பின் மகத்துவத்தை உணர்ந்து, ஆனந்தித்துப் பரவசமாகவும், பல உதவிகள், அவர்களால் நமக்கு உண்டு. ஆனால் அவர்கள் கிறிஸ்துவை மட்டுமல்ல, தங்கள் சுயதேச, சபா ஆசாரங்கள், சடங்குகள், பாட்டுகளையும், நமக்குள் நாட்டிவிட்டார்கள். அவர்கள் மேல் குற்றம் சாட்ட வழியில்லை. தங்களுக்கு அருமையாயிருந்த கோட்பாடுகளும், பாட்டுகளும், தங்களால் கிறிஸ்துமார்க்கத்திற்கு வந்தவர்களுக்குப் போதிக்கவேண்டுமென்று விரும்புவது இயல்பு தானே. ஆனால், ஐயோ, இரண்டு மூன்று தலைமுறைக் கிறிஸ்தவர்களாகிய நம் ஸ்திதி என்ன? நம் மார்க்கம் நம் தேசத்தாருக்கு ஒரு சத்தியமார்க்கமாயல்ல, பரதேச அந்நிய மார்க்கமாக, நாம் செய்துகொண்டிருக்கிறோம். இந்துக்களை வசியப்படுத்தக்கூடிய கீதங்களைத் தள்ளிவிட்டு, அவர்கள் விலகிப்போகும்படியான இராகங்களைக் கொண்டாடுவது எத்தனை துக்கமான காரியம்.

நம் பெருமானது வருகையின் நாளில், மற்ற தேசத்தார், தங்கள் தங்கள் தேசத்துக்குரிய மலர்களைக் கொண்டுவந்து, ஆண்டவனின் திருவடிகளில் சாத்தும்பொழுது, நம் பாரத தேசத்துக்குரிய, தாமரை மலரையல்லவோ, நாமும் கொண்டுபோய் சாத்த வேண்டும். கடவுளுடைய ராஜ்ஜியத்தில், சர்வதேசத்தாரும் வரும்பொழுது, தங்கள் தங்கள் இயற்கை வளங்களை, கரங்களில் ஏந்தி வருவார்கள். "ஜனங்களின் மகிமையையும் மேன்மையையும்

அதற்குள் கொண்டுவருவார்கள்'' என்று வேதவாக்கியம் கூறுகிறது. நாம் கொண்டுபோக வைத்திருக்கும் இயற்கை வளம் எது?

பெண்களாகிய நமக்கும், ஆலய ஆராதனைக்கும், என்ன சம்பந்தம் என்று நீங்கள் யோசிப்பீர்களோ? ஆராதனை முறைகளெல்லாம், குருமாருக்கும் Pastorate Committee மெம்பர்களுக்குமல்லவோ, சம்பந்தப்பட்டது; பெண்களாகிய நாம், இதில் என்ன செய்யமுடியுமென்று, நீங்கள் நினைக்கலாம்.

கோயிலுக்கு வந்திருக்கும் ஆண்களையும் பெண்களையும், கணக்கிட்டுப் பாருங்கள். யார் அதிகம்? நாமல்லவோ அதிகம். அப்படியானால் பெண்களாகிய நாம் சொல்லுகிற ஆலோசனையை, நம்முடைய குருமார், கமிட்டி மெம்பர்கள் தள்ளிப்போடுவது நியாயமல்லவே. பாட்டுகளும் இராக கியானங்களும், பெண்களுடைய பிறப்புரிமை என்று சொல்லும்படி, பெண்களுடைய குணாதிசயங்களில் ஒன்றல்லவா? பெண்களாகிய நம்முடைய சக்தி, அல்லது நம்முடைய செல்வாக்கு, நம்முடைய அத்தியட்சாதீன சகல விஷயங்களிலும், வழங்கட்டும். இதற்கு அனுகூலமாக, கிறிஸ்தவ பெண்கள், மகாநாடு ஒன்று, கிறிஸ்தவ தலைவிகளின் ஆதாவில், வருஷத்துக்கு ஒருமுறை கூட்டப்பட்டு, அதின் மூலமாக, பெண்களின் அபிப்பிராயங்கள், வெளிக்கு வருவது நல்லது. நம் கிறிஸ்தவப் பெண்கள், எவ்வளவு கற்றபோதிலும், எதிலும் தலைவிகளாக, முன்னின்று நடத்தப் பின்வாங்குகிறார்கள். ஆனால் இந்த சம்பந்தத்திலே நம் பெண்களில் ஒருவருடைய அரும், பெரிய, வேலையை நான் மிகவும் பாராட்டிப் பேசத்தக்கது. அவர்களுடைய, விடிவெள்ளி ஆசிரம் என்கிற, பெயருக்கொப்பான ஒரு விடிவெள்ளி போல, அவர்கள் நம்முடைய அத்தியட்சாதீனத்திற்கு விளங்குகிறார்கள். இன்னும் இப்படிப்பட்ட தலைவிகள் நம் அத்தியட்சாதீனத்திற்குத் தேவை.

வட இந்தியாவில் ஒரு பெண்ணுக்கு மந்திரி ஸ்தானம்கூட அளிக்கப்பட்டிருக்கிறது. தேசீயத்தில் கிறிஸ்தவ பெண்களாகிய நாம் முன்னுக்குவாாமல் ஒதுங்கி நின்றுவிடக்கூடாது. மற்றவர்களோடு ஒத்துழைக்கத் தவறி, நம்மை நாமே விலக்கி, ஒரு குன்றிய

கட்சியாகப் பிரித்துக்கொண்டதால், நம் அரசியல், பிராமண அரசியல் என்று குற்றஞ்சாட்டுவதற்கு ஏதுவாகிவிடுகிறது. இதினால்தான் அரசியல் விஷயத்தில் நமக்கு யாதொரு செல்வாக்குமில்லாமலிருக்கிறது. ஆகையினாலே, கிறிஸ்தவ பெண்களாகிய நாம் எழுந்து பிரகாசித்து, தேசிய நன்மைக்கான எல்லாவித நல்லியக்கங்களிலும், சேர்ந்துகொள்வோமாக. நம்முடைய நற்கிரியைகளும், நற்குணமும், பொதுஜன விருத்தியை நாம் நாடிச்செய்யும் பணிவிடைகளும், நாம் தேடாத நம்மை நமது ஜனங்கள் மதிக்கவும், தங்கள் தலைவர்களாகத் தெரிந்துகொள்ளவும் செய்துவிடும். இப்படிப் பூலோக மேன்மை கிடைக்காவிட்டாலும்தான் என்ன?

நம் ஜீவியத்தினால் பின்வருவோருக்கு, ஆசீர்வாதமும், பாக்கியமும், உண்டாவதற்காக சரித்திரம் கிறிஸ்தவப் பெண்களாகிய நம்மைப்பற்றி, எழுதப்படப்போகிறதோ, அல்லது பின்வருவோருக்கு நம் ஜீவன் சாரமற்றதும், பலனற்றதுமான காரியமாய் முடியுமோ? அதைரியப்படுகிறவர்களினால் ஒரு நன்மையும் உண்டாகமாட்டாது. ஊக்கமும் மனத்திர்க்கமும் வேண்டும். உலகம் நம்மைப் புகழ்ந்தாலுமோ, இகழ்ந்தாலுமோ, அது அக்கரையில்லை. ஜீவனுள்ள கடவுளின் முன்னேயும், வரப்போகிற சந்ததியாரின் முன்னேயும், நம் ஜீவியமும் அதின் வல்லமையும், தலைமுறை. தலைமுறையாய் ஜொலிக்கும்படி, இயேசுகிறிஸ்துவின் கிருபை நம்மனைவரோடுமிருப்பதாக.

சாயர்புரம் பிரிண்டிங் பிரஸ்—10-'39.

S. P. Press,
Sawyerpuram.
1939.